International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 1 Jan - Mar 2026

Published on 14, Jan - Mar 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# தமிழ் புதினங்களில் பழங்குடி மரபுகள் பழங்குடிகளின் சடங்குகள்

**ஆனந்தி. வி**
முனைவர் பட்ட ஆய்வாளர், கொங்குநாடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கோவை, பாரதியார் பல்கலைக்கழகம்
**முனைவர் ச. அரிச்சந்திரன்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, கொங்குநாடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கோவை, பாரதியார் பல்கலைக்கழகம்

**ஆய்வுச்சுருக்கம்**

சமுதாயம் என்பது தனக்கென சில அடிப்படை கட்டமைப்புகளை கொண்டு அவ்வமைப்பை பேணிப்பாதுகாத்து வருபதும் உண்டு. இவர்களில் சிறப்புடையவர்கள் மலைவாழ் மக்கள் இனம். வனத்தை மட்டுமே நம்பி தன் வாழ்க்கையை நடத்த கூடியவர்கள். மனித சமூகம் என்பதே பிறப்பு இறப்பு என்ற சுழற்சித்தன்மையை கொண்டு இயங்க கூடிய ஒன்று . இப்படிப்பட்ட இச்சுழற்சித்தன்மையில் பிறப்புக்கும் இறப்புக்கும் இடையில் பல்வேறு சடங்குகள் காணப்படுகின்றன. அவ்வாறு பழங்குடி மக்களின் வாழ்க்கையோடு இணைந்த சடங்குகள் பிறப்பு, பெயரிடுதல், காதுகுத்துதல், பருவமடைதல், திருமணம், வளைகாப்பு, குழந்தைப்பிறப்பு, இறப்பு என பல சடங்குகள் காணப்படுகின்றன. இவற்றை காட்டும் வகையில் அமைந்துள்ளது இக்கட்டுரை.

**முன்னுரை**

பழங்குடி இனமக்கள் இச்சடங்குகளை தொன்றுதொட்டு முன்னோர்கள் கடைபிடிக்கப்பட்டு வந்ததனால் இன்றும் இச்சடங்குகளை பின்பற்றி வருகின்றனர். இச்சடங்குகள் அவர்களின் வாழ்க்கையின் பண்பாட்டோடு தொடர்புடையதாக இருக்கின்றன. மனித சமூகத்தில் பின்பற்றப்படும் இச்சடங்குகள் ஒரு இனம் தனக்கென தனித்துவமான பண்பாட்டை காப்பதும், வளர்ப்பதும் மிக முக்கிய பங்காக இருக்கின்றன. மேலும் தனது இன ஒற்றுமையை வலியுறுத்தக் கூடியதாகவும் இச்சடங்குகள் அமைகின்றன.

**சடங்குகள்**

சடங்குகள் என்பது வழிவழியாகப் பின்பற்றக் கூடிய ஒன்றாகும். எந்த ஒரு முறையும் இன்றி தன் தனிப்பட்ட செயலாக இவை காணப்படுவது இல்லை. முழுவதும் தனது வாழ்வியல் முறைகளை வெளிக்காட்டும் ஒன்றாக இவை விளங்குகின்றன. “வழிவழியாக வரும் பலமரபுகளைக் காத்தல், மனித மனத்தின் ஆழத்தில் வேரூன்றிய செயல்”[1] என்று வாழ்வியல் களஞ்சியம் விளக்குகிறது. இச்சடங்குகள் வழிவழியாகப் பின்பற்றி வரக்கூடிய வெளிப்பாட்டுடன் நிகழ்த்தப்படுவதாகும். குறிப்பிட்ட காலகட்டத்திலும், குறிப்பிட்ட இடத்தில் நிகழ்த்தப்படுவதாகவும் இவை உள்ளது. சடங்கு என்பது “ ஒரு செயல் என்பது முதலில் தனி நபராலேயே தொடக்கப்பெற்றுப் பின்பற்றப்படுகிறது. இதுவே காலப்போக்கில் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படும், பொதுமைப்படுத்தப்பட்டுப் பல படிநிலை வளர்ச்சிகளைப் பெறுகின்றது. இதனால் தனிமனிதன் தொடங்கிய செயல்பாடு பழக்கமாகவும், பழக்கம் நன்மையின் அடிப்படையில் சமுதாயத்தால் ஏற்றுக்கொள்ளப்படும் போது வழக்கமாகவும் சடங்குகாகவும் நிற்கிறது என்பதை அறியலாம்”[2] சடங்குகள் பொதுச்சடங்குகளாக பொதுமக்களிடம்

அங்கீகரிக்கப்பட்டவையாக காணப்படுகின்றன. தொன்றுதொட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட அச்சடங்குகளே இன்றும் பின்பற்றப்பட்டு வருகின்றன.

**சடங்கு உருவாகக் காரணம்**

நிகழ்ச்சிகளும், அனுபவங்களும் அவற்றால் ஏற்படுகின்ற மாற்றமே சடங்குகளாக மாறுகின்றன. தெய்வங்களையே மையமிட்டதாக இந்த அனுபவங்கள் அமைகின்றன. குடும்பத்திற்கும், தனியொரு மனிதனுக்கும் தெய்வங்களை வழிபடுதல் அதனால் ஏற்படும் நன்மை சமூகத்திற்கும் நன்மை கிடைக்குமாத லால் இச்சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன. இவை பழக்கமாக மாறிவிட்டுத் தொடர்ந்து நிகழ்த்தப்படுகின்றன. "பழக்கம் டின்பது பயிற்சியின் முதிர்ச்சி என்பர். உயர்ந்தோர் பழக்கங்கள் காலப்போக்கில் வழக்கங்கள் என்று பெயர் பெறுகின்றன. ஒரு செயல் நன்மை விளைவிக்கின்றது என்று மக்கள் உணரும் நிலையில் அது பழக்கமாக மாறுகிறது. காலப்போக்கில் அறிவியல், கல்வி காரணமாகச் சமுதாயத்தில் முன்னேற்றம் ஏற்படும்போது அது சடங்காக மட்டும் நிற்கிறது."[3] வளர்ச்சியை எந்தவொரு சடங்கு ஏற்படுத்தியிருக்கின்றதோ அத்தகைய சடங்கே இன்றுவரை பின்பற்றப்பட்டு வந்திருக்கின்றது.

**சடங்கின் நோக்கம்**

வாழ்கின்ற போதும் இறப்பிற்கும் பிறகும் நன்மை கிடைக்கவும், குடும்பம் தழைத்தோங்க வும், மனம் உற்சாகம் பெறவும், அமைதி பெறவும், பீடைகள் நீங்கவும், உறவினர்கள் தங்களை மதிக்கவும், புதிய சொந்தங்களைச் சேர்த்துக் கொள்ளவும், நோயில்லாமல் இருக்க வும், நம்பிக்கை பெறவும் சடங்கு காரணமாக அமைகின்றது. "பண்டைய மக்கள் சடங்காச் சாரங்களை வைத்து வாழ்க்கையில் பலன்களைப் பெற மிக அவசியமெனக் கருதினர். முழை பெய்யவும், பயிர் வளரவும், காய்கிழங்குகள் கிடைக்கவும், நோய் நொடிகள் வராமல் இருக்கவும் புயல் போன்ற விபத்துகள் நடக்காமல் இருக்கவும்"[4] இச்சடங்குகள் இருப்பதாக நினைத்து உருவாக்கப்பட்டது. இன்றும் மக்கள் அனைவரும் இதனை வாழ்வில் ஒன்றாக நடைமுறையில் பயன்படுத்தி வருகின்றனர்.

**குழந்தைப் பிறப்பு**

பண்டையக் காலத்தில் குழந்தை பெற முடியாத சூழ்நிலையில் பல வகையில் கொடுமைப் படுத்தினர். இது குழந்தைப்பிறப்பின் ஆரம்ப காலகட்ட நிலையைக் காட்டுகிறது. மலைவாழ் மக்களிடையே தனித்துவமான குழந்தைப்பிறப்பு முறை உள்ளது. சோளகர்தொட்டி புதினம் இதனை சிறப்பாக கூறுகின்றது. அதுமட்டும் இன்றி கானகன் நாவலில் ப.எண்-93 மற்றும் குறிஞ்சாம்பூ நாவல் ப.எண.;216 குழந்தைப்பிறப்பு பற்றிய சடங்குகள் சிறப்பாக கூறப்படுகிறது. குழந்தைப்பிறப்பு சடங்கு ஒரு குடிசைக்குள் நடக்கிறது. ஆண்கள் யாரும் இதில் கலந்து கொள்ளக்கூடாது. பெரும்பாலான பிரசவங்கள் தொட்டியிலேயே நடக்கின்றன. இன்று இந் நிலைமாறி மருத்துவமனைகளில் மலை[மக்களின் பிரசவம் நடைபெறுகிறது. "தானே குழந்தைப்பேறு பார்த்துக் கொள்ளுதல் முறையும் அவர்களிடம் காணப்படுகின்றது. மலையில் வாழ கூடிய மக்கள் இயற்கையாகவே மலைகளிலும், காடுகளி லும் சுற்றித்திரிந்து வாழ்வதால் கர்ப்பிணிப் பெண்கள் மருத்துவச்சியின் துணையின்றி குழந்தையை பெற்றுக் கொள்கிறார்கள். குழந்தை பிறக்க முடியாத நிலையில் அதற்குப் பரிகார நிகழ்வும் உண்டு.

**பிரசவத்தீட்டு**

தீட்டுச் சடங்கினைச் கழித்தவுடன் மேற்கொண்ட வுடன் தான் பெண்ணையும், குழந்தையையும் வீட்டிற்குள் அனுமதிப்பர். "குழந்தை பிறந்த தீட்டை நாளையே கழித்துக்கொள். அதற்காக ஐந்து குலத்துக்காரர்களுக்குச் சொல்லிவிடு. நாளை வீடு அழைத்துக் கொள்ளலாம்."5 என்று கூறுவர். எல்லாதீட்டையும் தீட்டுச்சடங்கு செய்வதும் அவசியமானதும் ஏற்றுக்கொள்ளக் கூடியதுமாகும்.

**பெண் பூப்புச் சடங்கு**

பெண் பூப்புச்சடங்கு என்பது தமிழ்ச் சமூகத்தில் மிக முக்கியமானதாகும். "பெண்ணின் வளர்ச்சியை தெரியப்படுத்தக் கூடிய நிகழ்வாக இவை இருக்கிறது. பெண்கள் வயதிற்கு வந்துவிட்டால் அவளைக் குமரி ஆகிவிட்டாள் என்றும் சடங்காகிவிட்டாள் என்றும், ருது ஆகிவிட்டாள் என்றும் குறிப்பிடுவர்."[6] பூப்பு அடைந்துவிட்டாள் அவள் திருமணத்திற்குத் தயார் என்பதனை ஊர் மக்களுக்கு மறைமுக பெண் வீட்டார் கூறுகின்றனர்.

**பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும்**
(தொல்.பொருள்-187)

"பூத்தென நங்கை பொலிதென நாணுதல்" (பரி-11:25) பெண் பருவமடைந்ததும் வீட்டுக்கருகில் தனிக்குடில் ஒன்றுகட்டி அதில் ஏழு முதல் பத்து நாட்கள் அப்பெண்ணைத் தங்கவைப்பர். பருவம் அடைந்த பெண்ணை மாதவிடாய்க் காலத்தில் இருக்கும் பெண்கள் பார்க்கக்கூடாது. அவ்வாறு

பார்த்தால் பருவமடைந்த பெண்ணிற்குக் கணவன் கிடைக்கமாட்டான் என்று நம்புகின்றனர். பூப்படைந்த வீட்டில் பிறர் உணவு உண்ணுவது இல்லை. இன்றைக்குக் காலம் மாறியிருந்தாலும் தீட்டுச்சடங்கினை முறையாக மக்கள் பின்பற்று கின்றனர். குடிசைகட்டுதல், குடிசையில் தங்குதல் மற்றும் நமது சமூகத்தில் பூப்புச்சடங்கு செய்தல் என்பது என் மகள் மணப்பெண்ணாவதற்குத் தயாராகிவிட்டாள் என கூறுவதாகவே உள்ளது.

**திருமணச்சடங்கு**

திருமணச்சடங்குகளும், முறைகளும் இனத்துக்கு இனம் மாறுபடுகிறது. "ஹீப்ரு மக்களுடைய நோக்கத்தில் திருமணம் செய்து கொள்வது சிறந்த தருமம் ஆகும். ஷீல்ஹன் அரும்பின் கொள்கைப்படி கல்யாணம் ஆகாதவன் கொலை யாளிக்குச் சமமானவனாவான். அவன் கடவுளுக்குத் தீங்கு செய்தவன். இஸ்ராயிலுக்குத் தூய்மைக் குறைவை ஏற்படுத்தியவன். ஆகையால், இருபது வயது நிரம்பிய இளைஞனை நீதிமன்றம் கல்யாணம் செய்து கொள்ளும்படி வற்புறுத்தலாம்."[7] திருமணத்தில் கவுண்டர், கரைகாரன், பூசாரி, ஐயன்பூசாரி, தண்டல் போன்றவர்கள் இருப்பார்கள். திருமணத்தை இவர்கள் தான் நடத்தி வைப்பார்கள். பின்னர் மாப்பிள்ளை வீட்டிற்கு அனைவரும் செல்வர். திருமணத்தில் இசை கச்சேரி காணப்படும். "தென்னிந்தியாவின் மிகப்பழமையான ஆதாரங்களுமான தமிழ் நூல்கள் யாழ், குடில், மத்தளம் முதலிய கருவி களைக் குறிப்பிடுகின்றன."[8]

**இறப்புச் சடங்குகள்**

மனித வாழ்வில் இறுதியாக இருப்பது இறப்புச்சடங்கு ஆகும். பலவடிவங்களில் இறப்பானது ஏற்படுகிறது. சமூகத்தாரோடும், உறவினர்களோடும் வாழ்ந்து வரும்போது இறப்பு ஏற்பட்டால் அது பெரிய மாறுதலை உண்டாக்கு கிறது. இனத்திற்கு இனம், நாட்டுக்கு நாடு இறப்புச்சடங்கு வேறுபட்டு காணப்பட்டாலும் காலங்காலமாக இவை பின்பற்றப்படுகின்றன. ஒரு சமுதாயத்தின் தத்துவத்தையும், பண்பாட் டையும், வெளிப்படுத்த கூடிய ஒன்றாக இச்சடங்குகள் அமைகின்றன. சடங்குமுறைகள் பழங்குடிகளின் இதற்கு விதிவிலக்கல்ல. இறந்தவர்களுக்கு நன்மை நிகழ வேண்டும் என்றோ அல்லது அவரால் நமக்கு ஏதேனும் துன்பம் வரக்கூடாது என்று நினைத்து இந்த இறப்புச் சடங்குகளை அனைத்து சமூகத்தினரும் செய்கின்றனர்.

சங்க இலக்கியம் முதல் இக்கால இலக்கியங்கள் வரை இறப்பு செய்திகள் பதிவாகியிருக்கின்றன. **"மாரடித்துப் புலம்பியதை உருப்ப எருக்கிய மகளிர்"** (புறம்:237:10) பிணத்தின் மீது கோடித்துணி போர்த்துதல், **"கால்கழி கட்டிலில் கிடப்பித் தூவெள் ளறுவை போர்ப்பித் திலதே"** (புறம்:286:4-5) சாவுப்பறை முழங்கியதை, "ஓரி னெய்தல் கறங்க வோரில்" (புறம்:194.1) கணவனோடு தன்னையும் சேர்த்துப் புதைக்க தாழியைப் பெரியதாகச் செய்யச் சொல்லுதல், **"வியல் மலர் அகன்பொழில் ஈமத்தாழி அகலிதாக வனைமோ"** (புறம்:256:4-5) குழிமேட்டின் மீது கள்ளும் பிண்டமும் வைத்து வழிபடுதல் **"வெள்ளில் நிறுத்த பின்றை, கள்ளொடு புல்லகத்து இட்டசில் அவிழ் வல்சி"** (புறம்:360:17-18). இவ்வாறு பல செய்திகள் இறந்தவரைப் பற்றி இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன. இம்மக்களின் அனைத்து சடங்குகளையும் காண்பது மிகவும் சிறப்புடையது.

**முடிவுரை**

இச்சடங்குகள் தங்களைத் தனித்துவமாக அடையாளப்படுத்திக் கொள்ளவும், சமூக ஒற்றுமைக்கும் இச்சடங்குகள் முக்கியமான ஒன்றாக அமைகின்றன. இவ்வாய்வுகள் பழங்குடி மக்களிடம் காணப்படும் சடங்குகளில் ஒரு சில சடங்குகளை இவை காட்டுகின்றது.

**அடிக்குறிப்புகள்**

1. தொல்காப்பியம்,பொருளதிகாரம்
2. பரிபாடல்
3. புறநானூறு

**துணைநூல்கள்**

1. வாழ்வியல் களஞ்சியம், தொகுதி - 8 ப - 300
2. ஆ. திருநாகலிங்கம்,புதுச்சேரி வட்டார நாட்டுப்புறக் கதைகள் காட்டும் சமுதாயம் ப - 159
3. ஆறு.இராமநாதன், நாட்டுப்புறப்பாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல் ப - 193
4. நா. வானமாமலை, தமிழர் பண்பாடும்,தத்துவமும் ப -127-128
5. மேலது ப-16
6. முனைவர்.க.அழகர், விருதுநகர் மாவட்டப் பழியர்களின் வாழ்வியல் ப - 139
7. டி.எஸ்.பார்த்தசாரதி, இசைக்கருவிகள் ப -18
8. காவிரிநாடன், உலகத்திருமணங்கள் ப : 14-15.